අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. } ED/05/68/12/தே.கி.(14/2022 II) ඔබේ අංකය / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } 2022.10.19

சகல மேலதிக செயலாளர்கள்
பரீட்சை ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
தலைமை ஆணையாளர் (ஆசிரியர் கல்வி),
மாகாணக் கல்விப் பணிபாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
பீடாதிபதிகள்,
அதிபர்கள் (ஆசிரியர் கலாசாலை),
அதிபர்கள்(தேசிய பாடசாலைகள்),
ஆசிரியர் நிலைய முகாமையாளர்கள்,

**<u>மூப்புநிலை மற்றும் ஓய்வூதியத்திற்கு பங்கம் ஏற்படாதவாறு அரச ஊழியர் தொடர்பாக உள்நாட்டு ரீதியாக ஊதியமற்ற விடுமுறையினை பெற்றுக்கொடுத்தல்</u>**

கல்வி அமைச்சில் இணைக்கப்பட்டு பணிபுரியும் நாடளாவிய சேவை, ஒருங்கிணைந்த சேவை மற்றும் ஒருங்கிணைந்த சேவை அல்லாத கல்விசாரா பணிக்குழுவினருக்கு 14/2022 (II) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் உள்நாட்டு ரீதியாக ஊதியமற்ற விடுமுறையினை அனுமதிப்பது தொடர்பில் கவனம் செலுத்துவதற்கான உரிய விடுமுறை கோரிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவம் 0-1 இன் படி சேவைக்குரிய மேலதிக செயலாளர் ஊடாக கல்வி அமைச்சு செயலாளரின் அனுமதிக்காக முன்னிலைப்படுத்த வேண்டும்.

02. அந்த விடுமுறை தொடர்பான அனுமதியினை கல்விச் செயலாளரிடம் பெற்ற பின்னர் உரிய விண்ணப்பப்படிவத்தை மீண்டும் சுயவிபரக்கோவை வரையில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டியதுடன், அலுவலரின் உள்நாட்டு ஊதியமற்ற விடுமுறையினை அனுமதிக்கும் கடிதம் சுயவிபரக் கோவைக்கு பொறுப்பான அலுவலரின் கையொப்பத்துடன் உரிய அலுவலருக்கு வழங்கப்பட வேண்டும். மேலும், ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தினால் 2022.09.20 ஆம் திகதி வெளியிடப்பட்ட 06/2022 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றிக்கையின் விதிமுறைகளுக்கேற்ப உரிய தரப்பினர்களினால் இந்த விடுமுறை அனுமதிப்பின்போது செயற்பட வேண்டும் என்பதனையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

03.மேலும், ஏலவே உள்நாட்டு ரீதியாக ஊதியமற்ற விடுமுறையினை பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கையினை முன்வைத்துள்ள அலுவலர்கள் உரிய படிவத்திற்கமைவாக மீண்டும் விண்ணப்பிகக் வேண்டும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பீ.எல்..பத்மகுமார
மேலதிக செயலாளர் (நிர்வாகம்)

ஒப்பமிட்டவர் : எம்.என். ரணசிங்க
கல்விச் செயலாளர்